# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி 2025
## D021 இலக்கணம்–3 (பொருள்)

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. முதற்பொருளில் அடங்கும் இரு பொருள்கள் யாவை?
2. இருத்தல், இரங்கல் உரிப்பொருளை விளக்குக.
3. இருவகைக் கைகோள்கள் எவை ?
4. முன்னிலை புறமொழி– விளக்கம் தருக.
5. பாங்கி வெளிப்படுத்தும் மூவகைப் புணர்ச்சிகள் யாவை?
6. அறத்தோடு நிற்றல் என்றால் என்ன?
7. தபுதார நிலை என்றால் என்ன?
8. அகப்பாட்டினுள் வரும் பொருட்கள் எவை?
9. கரந்தைத் திணையின் துறைகள் எத்தனை?
10. உழிஞைக் கொடியின் இக்காலப் பெயர் என்ன?
11. 'தானைமறம்' என்னும் துறை எதனைக் காட்டுகிறது?
12. வஞ்சிவேந்தன் எதனைப் புறவீடு செய்வான்?
13. 'உழுபுலவஞ்சி' எதனைச் சொல்கிறது?
14. ஆகையறுநிலை என்பதின் பொருள் யாது?
15. வாயுறை வாழ்த்து – என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கார், இளவேனில், பின்பனி இவற்றுக்குரிய மாதங்களை எழுதுக.
2. பகற்குறி, இரவுக்குறி – விளக்குக
3. பரத்தையர் பிரிவின் வகைகள் எத்தனை? அவை யாவை?
4. திணை மயக்கம் என்பதைச் சான்றுடன் விளக்குக.
5. கைக்கிளை – விளக்குக
6. போர்க்கான பொதுக் காரணங்கள் மூன்றினைச் சுட்டுக.
7. மறக்களவழி என்றால் என்ன? அத்தன்மையில் அமைந்த இலக்கியம் எது?
8. உழிஞை ஒழுக்கம் பற்றி விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) 'அகப்பொருள் இலக்கணம் தமிழின் தனிச்சிறப்பு' என்பதை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) கற்போடு புணர்ந்த கவ்வையில் புலப்படும் உறவினர்களின் அன்பு உணர்ச்சியை இக்காலத்துடன் பொருத்தி ஆராய்க.

2. (அ) கைகோள் வகைகளைக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) கரந்தைப்போரில் மறவர்களின் வீரம், வீரமொழி, மீட்சிப்போரின் நிகழ்வுகளில் அரசியல் அறம் ஊடுருவி நிற்பதைப் புலப்படுத்துக.

3. (அ) தும்பைப் போரின் தனி இயல்புகளைப் புறப்பொருள் வெண்பா வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) போரும் அதன் விளைவுகளும் தனிமனிதனைச் சமுதாயத்துடனும் மனித இயல்புடனும் இணைக்கிறதா? இது ஏற்புடையதா என ஆராய்க.

***